**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W.15.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மருதுபாண்டி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025.

A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தற்போது இளம்புவனத்தில் குடியிருந்து சாலை அமைக்கும் ஒப்பந்த தொழில் செய்து வருகிறேன். கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் சிகேடி பள்ளி அருகில் இருசக்கர வாகனத்தில் சென்ற ஒரு நபருக்கு விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக இளம்புவனத்தில் இருந்த தேவர் சிலையில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்ய வந்து என்னை விசாரித்தார்கள். போலீசார் மறுநாள் மேற்படி பதிவுகளை எடுத்துச் சென்றார்கள். மேற்படி பதிவுகளை பென்ட்ரைவில் பதிவு செய்து எடுத்துச் சென்றார்கள். இளம்புவனத்தில் தேவர் சிலைக்கு அருகில் உள்ள அறையில் கேமரா பதிவுகள் பதிவு செய்வதற்கான உபகரணங்கள் உள்ளது. மேற்படி சாலையில் ஒரு ஆங்கிள் அமைத்து அதில் கேமராக்களை பொருத்தியுள்ளார்கள். மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளில் டிப்பர் லாரி மேற்கிலிருந்து கிழக்காக வந்து கொண்டிருந்தது. மீண்டும் கிழக்கிலிருந்து மேற்காக லாரி சென்றது. டிப்பர் லாரியில் SR என்று எழுதப்பட்டிருந்தது. ஆர்கே துரை என்பவர் இருசக்கர வாகனத்தில் வரும்போது விபத்தில் இறந்துவிட்டார். பிறகு அவர் கொலை செய்யப்பட்டதாக செய்தித்தாளில் செய்தி வந்தது. மேற்படி பதிவுகள்

இருந்த தேதி 01.04.2024. மேற்படி கேமரா பதிவுகளை எடுத்தற்கான நான் வழங்கிய சான்றிதழ் **அ.சா.ஆ 11**. இந்த ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஒப்பந்த தொழில் செய்வதால் காலையில் சென்றால் மாலையில் அல்லது இரவில்தான் வீட்டிற்கு வருவேன் என்றால் சரிதான். தேவர் சமுதாய சங்கத்தில் நான் பொருளாளராக இருக்கிறேன். அதனால் சங்கத்திலிருந்து பணம் கேட்டால் வங்கியிலிருந்து எடுத்துக் கொடுப்பேன். இதர நிர்வாக பொறுப்புகளை சங்கத்தலைவர் மற்றும் செயலாளர்தான் கவனித்துக் கொள்வார். தலைவர், செயலாளர் பொறுப்பில்தான் மேற்படி அறைக்கான சாவி இருக்கும் என்றால் சரிதான். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஹார்டு டிஸ்க், மவுஸ், ஐபி அட்ரஸ் ஆகியவை என்னவென்று தெரியாது. அவை எந்த தொழில் நுட்பத்தை சார்ந்து இயங்குகிறது என்று எனக்கு தெரியாது. தமிழ் கையொப்பமிடுவது மட்டும்தான் எனக்கு தெரியும் என்றும், எனக்கு ஆங்கில புலமை இல்லை என்றும் சொன்னால் சரிதான். ஆங்கில வார்த்தைகளை என்னால் படிக்கவோ, புரிந்து கொள்ளவோ முடியாது என்றால் சரிதான். மேற்படி கேமராக்களை போலீசார் கேட்டதன்பேரில் தனி நபர் மேற்படி சிலைக்காக வழங்கியுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. கேமரா பதிவுகளை அவ்வப்போது போலீசார் நேரடியாக அவர்களே ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். அந்த கேமரா பதிவுகளை போலீசார் வலைதளத்தில் நிலையத்தில் இருந்து கொண்டே கண்காணிப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் அங்கு வந்து கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததற்காக என்னிடம் கேட்டுக் கொண்டதால் அ.சா.ஆ 11–ல்

நான் கையொப்பமிட்டேனா என்றால் கேமரா பதிவுகளை எடுத்துக் கொண்டதற்காக நான் கையொப்பமிட்டேன். காவல் ஆய்வாளர்தான் பதிவுகளை எடுத்துக் கொண்டார். இளம்புவனத்தின் ஊராட்சித் தலைவரின் கணவரும், நானும், டிப்பர் லாரி மூலமாக கட்டுமானப்பொருட்கள் மற்றும் சுரங்கம் சார்ந்த பொருட்களையும் டிப்பர் லாரி மூலமாக ஏற்றிச் செல்லும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். ஊராட்சித் தலைவரின் கணவர் பெயர் குமார். அவர் இந்த வழக்கில் சாட்சியாக இருக்கிறார். சம்பவம் நடந்ததாகசொல்லும் இரண்டு நாட்களில் போலீசாருக்கு வேண்டிய உதவிகளை மேற்படி குமார் செய்தார் என்றால் சரிதான். அவர் மூலமாகத்தான் போலீசார் சம்பவ சம்பந்தமாக கேட்டுத் தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் கேட்பதை செய்து கொடுக்க வேண்டுமென்று மேற்படி குமார் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். மேற்படி குமார் சொல்லவில்லை என்றால் அ.சா.ஆ 11 ல் நான் கையொப்பமிட்டிருக்க மாட்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் போலீசார் கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடுத்துக் கொள்ளவில்லை என்றும், அதுபற்றி எனக்கு நேரில் தெரியாது என்றும், நான் அறைக்குள் செல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக மேற்படி குமாரை அ.சா.1 அடிக்கடி வந்து பார்த்துவிட்டு செல்வார் என்றால் எனக்கு தெரியாது. நானும், குமாரும் கட்டுமானப்பொருட்களை ஏற்றிச் சென்று சப்ளை செய்யும் தொழில் செய்து வருவதால் போலீசார் அனுசரணை வேண்டும் என்பதால் போலீசார் கேட்டுக் கெண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தொழிலுக்கு போலீசார் அனுசரணை வேண்டுமென்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.24 19:41:59 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.16.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அருண்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது எட்டையபுரம் நடுவப்பட்டியில் குடியிருந்து இளம்புவனத்தில் பெட்ரோல் நிலையத்தில் காசாளராக வேலை செய்து வருகிறேன். 01.04.2024 அன்று சிகேடி பள்ளி அருகில் ஒரு லாரி இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. 04.04.2024 அன்று போலீசார் அது சம்பந்தமாக என்னை மேற்படி பெட்ரோல் நிலையத்தில் வந்து விசாரித்தார்கள். 01.04.2024 அன்று ஒரு லாரி மேற்கிலிருந்து கிழக்காக வந்து மீண்டும் கிழக்கிலிருந்து மேற்காக U வளைவு எடுத்துச் சென்றது குறித்து என்னிடம் விசாரித்தார்கள். மேற்படி லாரி அவ்வாறு சென்றது குறித்து எங்கள் பெட்ரோல்நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை பதிவு செய்து கொண்டுபோனார்கள். 04.04.2024 அன்று கணினியில் தொழில்நுட்ப கோளாறு இருந்தது. அதனால் பென்ட்ரைவில் பதிவு செய்து கொள்ளவில்லை. கணினியில் இருந்ததை கைபேசி கேமரா மூலமாக பதிவு செய்து கொண்டார்கள். மேற்படி விபத்தில் ஆர்கே துரை இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். அவர் இருசக்கர வாகனத்தில் இருக்கும்போது லாரி மோதி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பெட்ரோல்நிலையத்தில் வாடிக்கையாளரிடமிருந்து பணத்தை வாங்கி போடுவதுதான் என் வேலை என்றால் சரிதான். அதனால் பெட்ரோல் விற்பனை கணக்கில் பணம் குறைந்தால் அதற்கு நான்தான் பொறுப்பு என்றால் சரிதான். அதனால் நான் பெட்ரோல் விற்பனை கணக்கில்தான் கவனமாக இருப்பேன் என்றும் மற்ற செயல்கள் குறித்து நான் கவனிக்கமாட்டேன் என்றும் சொன்னால் சரிதான். எங்கள் பெட்ரோல் நிலையம் இருக்கும் இடத்தில் நான்கு குவாரிகள் உள்ளன என்றும், அதனால் டிப்பர் லாரிகள் அங்கு அடிக்கடி வந்து போகும் என்றும் சொன்னால் சரிதான். அதனால் எந்த லாரி எதற்காக வந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்படி கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் வாரத்திற்கு குறைந்தபட்சம் நான்கு விபத்துகள் நடக்கும் என்றால் சரிதான். அதனால் அந்த பகுதியில் உள்ள பெட்ரோல்நிலையங்களில் போலீசார் எப்போது வேண்டுமானாலும் சென்று அவர்களாகவே கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். அதனால் ஒரு தனிப்பட்ட நபர்தான் கேமராக்களை இயக்குவார் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். 04.04.2024 அன்று கணினியில் தொழில் நுட்ப காரணமாக பென்ட்ரைவில் பதிவு செய்து கொள்ளமுடியவில்லை என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி கணினியில் உள்ள பதிவுகளில் 01.04.2024 தேதிக்கு பதிலாக 07.01.2000 காலை 9.37 என்று பதிவாகியிருந்தது என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதாவது 24 வருடங்களுக்கு முந்தைய பதிவு 01.04.2024 அன்று பதிவாகியிருந்ததாக போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். ஒரு கணினியில் எந்த தேதி, நேரத்தில்

ஒரு காட்சி பதிவாகிறதோ, அந்த தேதியில் அந்த நிகழ்வு நடந்திருப்பதாக பதிவுகள் காட்டும் என்றால் சரிதான். கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடிட் செய்து கொள்ளலாம். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் மேற்படி பங்கில் பணியில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பொதுவாக எல்லா பெட்ரோல் நிலையங்களிலும் எந்த நேரத்தில் எந்த எந்த நபர்கள் என்ன என்ன பணியில் இருந்தார்கள் என்பதற்கான வருகைபதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அதில் ஊழியர்கள் கையொப்பமிட வேண்டுமென்றும், பயோமெட்ரிக்கில் ரேகையை பதிவு செய்ய வேண்டுமென்றும் சொன்னால் சரிதான். மேற்படி பதிவுகள் படி மேற்படி தேதியில் நான் மேற்படி பங்கில் பணியில் இல்லை என்றால் தவறு. எங்கள் பெட்ரோல் நிலைய தொழிலுக்கு ஆய்வாளரின் அனுசரணை தேவை என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.24 19:42:47 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.